யாழ்ப்பாணம்
நல்லூர் ஒன்றுகூடலகம்.

13 MAY 1997
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

செய்திப் பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டது

# உதயதாரகை

கிறிஸ்தவ வாரப் பத்திரிகை

மலர்: 158 ஆரம்பம்: 1841 வெள்ளிக்கிழமை 02 - 5 - 1997 இதழ்: 11

பக்கங்கள் 4

நீதிமான்கள் பெருகினால் ஜனங்கள் மகிழுவார்கள்; துன்மார்க்கர் ஆளும் போதோ ஜனங்கள் தவிப்பார்கள்.

நீதிமொழிகள் 29: 2

# வாய்மொழி மூலம் மட்டுமன்றி வாழ்க்கையிலும் ஒளிதரக் கூடியதாக செயற்படுங்கள்

வட்டுக்கோட்டையில் இயங்கி வரும் கிறிஸ்துவ இறையியல் கல்லூரியின் திருப்பணியர் வழியனுப்பு வழிபாடு கடந்த ஞாயிறு 27 - 4 - 1997 அன்று பிற்பகல் 3.00 மணியளவில் யாழ். ஆதீன ஆசன ஆலயத்தில் அருளுரை ஆற்றிய அருட்திரு டியுலிப் பெர்ணாண்ட்டோ, இலங்கை மெதஸ்டிஸ்த மகா சங்கத்தின் தலைவர் "வாய்மொழி மூலம் மட்டுமன்றி வாழ்க்கையிலும் ஒளிதரத் தக்கதாக வாழ்ந்து காட்டுங்கள்" என மிகச் சிறந்த முறையில் நல்லுபதேசம் கூறினார், பேராயர் அருள்மிகு அறிவர் எஸ். ஜெபநேசன் தலைமை தாங்கினார். அருள்திரு,D.R. அம்பலவாணர் பேராயருக்கு வழிபாட்டில் உதவினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், அன்று கிரேக்கர் எருசலேம் பண்டிகை நாளில் "இயேசுவைகாண விரும்புகிறோம்" என வாஞ்சையோடு கூறினர், அதே போன்று இன்றைய சூழ்நிலையில் பல்வேறு இன மக்கள் இயேசுவைக் காண குரல் எழுப்பிய வண்ணம் இருக்கின்றார்கள். இயேசுவை காண்பிப்பது உங்களது தலையாய கடன். வாய்மொழி மூலம் மட்டுமன்றி வாழ்க்கையிலும் ஒளிதரத்தக்கதாக வாழ்ந்து காட்டுங்கள் அறிவு தேவைதான. அறிவு மட்டும் உங்களது பணியை சிறப்பிக்காது ஆவியானவரின் அருளினால் நிரப்பப்படவேண்டும் ஆன்மீக ஆற்றல் பெற்றவர்களாக தாழ்மையோடு பணி செய்யுங்கள். அப்பொழுது தான் இன்றைய சூழ் நிலையில் ஏற்ற பயனைப் பெறலாம் "பொன் முடிக்கன்றி முள்முடிக்கே" தயார் செய்யுங்கள் என அருளுரையாற்றினார்.

குருத்துவ பயிற்சியைப் பெற்றுப் பணிக்களம் வெளியேறும் சகோ. எஸ். குகனேஸ்வரன் (குடத்தனை) சகோ. ஏ. பி. தேவதாஸ் (சங்கானை), சகோ. எம். ஜே. சுதர்சன் (அராலி), சகோதரி ஆ. டெய்சி (உடுவில் உதவி ஊழியர்) ஆகியோருக்கு பேராயர் சான்றிதழ் வழங்கி அறிவுரை வழங்கினார். குருத்துவ மாணவரின் பதிலுரையின் பின்னர் சபையார் எழுந்து நின்று வாழ்த்துரை கூறி ஏற்றுக் கொண்டனர். முன்னாள் பேராயர் அருள்மிகு அறிவர் டி. ஜே. அம்பலவாணர் அவர்கள் இறை வேண்டல் செய்து இறையாசியை வழங்கினார். வண. S. I. ஆனந்த ராஜா நன்றிநவின்றார்.

## மருத்துவ பரிசோதனை முகாம்

கடந்த 20- 04- 97 ஞாயிறு காலை 9. 30 மணிக்கு சாவகச்சேரி திருச்சபை மாதர் சங்கத்தினர் சார்பாக லயன்ஸ் கழக ஆதரவுடன் மருத்துவ பரிசோதனை முகாம் சபை மண்டபத்தில் சபைப் போதகர் வண. பி. ஆர். நவேந்திரானுகூலன் தலைமையில் இறை வணக்கத்துடன் ஆரம்பமானது. இப் பரிசோதனை முகாமில் லயஸ்கழக தலைவர் எஸ், கமலநாதன், செயலாளர் எஸ். சற்குணதேவன், வலயத் தலைவர் Dr. S. அருளானந்தம், பிரதி சுகாதாரப் பணிப்பாளர் Dr. K.T சிவபாதம், Dr. V தம்பித்துறை ஆகியோர் சமூகமளித்தனர்.

Dr. S. அருளானானந்தம் தமது உரையில் மனிதர்களை அதிகமாக ஆட்கொள்ளும் நோய் இரத்த அழுத்தம், நீரிழிவு நோயுமே ஆகும். ஆகவே நாம் வைத்திய பரிசோதனையை அடிக்கடி செய்து எம்மை நோயின் தாக்கத்திலிருந்து விடுவித்துக் கொள்ள வேண்டும், என்றும், சிலர் தமக்கு எதுவித நோயுமில்லையென அக்கரையில்லாது இருந்து விடுகிறார்கள், ஆனால் அவர்

(4ம் பக்கம் பார்க்க)

## பாரதிதாசன் பிறந்த தினம்



29- 4 97 புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் பிறந்த தினம். இவரின் இயற்பெயர்: கனகசுப்பு ரத்தினம் மகாகவி பாரதியாருடன் பத்து வருடங்களுக்கு மேல் பழகியவர் புரட்சிக் கவிஞர் 21 4 64 இயற்கை எய்தினார். 1980ல் அவருடைய படைப்புக்கள் பொது உடைமையாக்கப்பட்டன.

### பாவேந்தர் வீரமொழிகள்

வெள்ளம்போல் தமிழர் கூட்டம் வீரங்கொள் கூட்டம் அன்னார் உள்ளத்தால் ஒன்றே உடலாற் பலராய்க் காண்பாய்

வெங்கொடுமைச் சாகாட்டில் விளையாடிய வெற்றித் தோள்கள் எம் தோள்கள்

எமது பகைவர் எங்கோ மறைந்தார் இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டு

தமிழ் எங்கள் இளமைக்குப் பால் அந்தத் தமிழ் நல்ல புகழ் மிக்க புலவர்க்கு வேல்

படியாத பெண்ணினால் தீமை என்ன பயன் விளைவிப்பாள் அந்த உமை?

## கிழக்கு மாகாண செய்தி

மட்டக்களப்பு மாநகரில் அனேக ஆண்டுகளுக்குப்பின் இவ்வருடம் தெ. இ. தி புனித யோவான் ஆலயத்தில் ஓர் ஈஸ்டர் பஜனை நடைபெற்றது.

இப்பஜனை 29- 3- 97 அன்று மாலை 4. 30 மணிக்கு பாடகர் குழுவினரின் பவனியுடன் ஆரம்பமாகியது. இப் பஜனை நிகழ்ச்சியில் சபை ஊழியன் அருட்திரு எஸ். ஜெயநேசனின் வணக்க அழைப்புடன் ஆரம்பமாகியது. இப்பஜனையில் பாடகர் குழுவினர் பதுதப் பாடல்களைப் பாடி ஆண்டவரின் உயிர்த் தெழுந்த செய்தியையும், கீழைத்தேய கர்நாடக சங்கீதப் பாடல்களுக்கூடாகப் பாடினார்கள்

## புதிய பகல் பராமரிப்பு நிலையங்கள்

தென்னிந்திய திருச்சபையின் புதிய பகல் பராமரிப்பு நிலையங்கள் பேராயர் அதி வண. கலாநிதி. எஸ். ஜெபநேசனால் நாக்கனாவத்தை, கேல்வத்தை மக்களின் நன்மைக்காக 3- 3- 97 அன்று திறந்து வைக்கப்பட்டது. இதில் வண. S. C. ஆணல்ட் தலலமை, யில் பொதுக் கூட்டம் நடைபெற்றது, வண. S. C, ஆணல்ட், திட்டப் பணிப்பாளர் திரு. வி. மித்திர ரஞ்சன், இளைப்பாறிய ஆசிரியர் எஸ், மாணிக்கம் ஆகியோர் உரையாற்றினார்கள். சிறப்புரையை அதி வண. கலாநிதி எஸ் ஜெபநேசன் ஆற்றினார். சபைக் குரு வண. ஏ. எஸ். தேவகுணாநந்தன் நன்றியுரை வழங்கினார்,

தொடர்ந்து 16- 04- 97 சாலை பேராயர் உடுப்பிட்டி தேவாலயத்திற்கு வண E.P, சொலமன் அவர்களுடன் விஜயத்தை மேற்கொண்டு திருவிருந்து ஆராதனையை நடத்தினார். அதன் பின் உடுப்பிட்டி மக்களின் நன்மைக்காக பகல் பராமரிப்பு நிலையம் பேராயரினால் திறந்து வைக்கப்பட்டது. இவ் வைபவத்தில் இளைப்பாறிய சுகாதாரதிட்டமிடல் அதிகாரீ ஆகியோர் உரையாற்றினார்கள். பேராயர் சிறப்புரையை வழங்கினார். நன்றியுரையை வண. T. H. வசந்தகுமார் வழங்கினார் இறுதியில் பேராயரின் தேவாசீர்வாதத்துடன் கூட்டம் இனிதே முடிவுற்றது.


## உப்பு நீர் தடுப்பு அணை திருத்தம்

பொன்னாலைப் பாலம் தொடக்கம் அராலிப் பாலம் வரையான உப்பு நீர் தடுப்பு அணையின் திருத்த வேலைகள் அகதிகளுக்கான ஐ. நா. உயர் தூதரகத்தால் அப்பகுதி விவசாயிகளின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட உள்ளன ஐந்து கிலோ மீற்றர் நீளம் கொண்ட மேற்படி அணையை மீள அமைப்பதற்கு மேற்படி தூதரகம் நிதியை வழங்க முன்வந்துள்ளது. மேலும் இப்பகுதியில் வாழும் வசதி குறைந்த கிராம மக்கள் குடி தண்ணீர் பெறும் கிணறுகளையும், குழாய்க் கிணறுகளையும் புனரமைப்பதற்கும் புதிய கிணறுகளை அமைத்துக் கொள்வதற்கும் தேவையான நிதியையும் மேற்படி நிறுவனம் வழங்கும்.

# திருச்சபை ஐக்கியத்தின் பொன் விழா ஆண்டு 1947 - 1997

எஸ். ஜெபநேசன் எழுதுவது

# தென்னிந்திய திருச்சபையின் பொன் விழா



★ செப் 26, 27 சென்னை
★ அக் 11, 12 கொழும்பு
★ அக் 15 வட்டுக்கோட்டை
★ மலர் வெளியீடு
★ மரங்கள் நாட்டல்
★ இலவச வீட்டுத்திட்டம்
★ சித்திரப்போட்டி
★ பிறநாடுகளில் பெருவிழா

இன்று தென்னிந்தியாவில் அதிகமாகப் பேசப்படும் விஷயங்களில் ஒன்று தென்னிந்திய திருச்சபையின் பொன் விழாவாகும். உள்ளூர் திருச்சபைகளிலும் திருமண்டலங்களிலும் சினட் மகாசபையிலும் பொன் விழா என்பதே பேச்சாகவிருக்கின்றது.

இவ்வருடம் செப்டெம்பர் மாதம் 26ம், 27ம் திகதிகளில் இவ்விழா சென்னை புனித ஜோர்ஜ் தேவாலயத்தில் நடைபெறவிருக்கின்றது. நமது ஆதீனத்தின் கொண்டாட்டங்கள் கனடாவிலும் இங்கிலாந்திலும், அவுஸ்திரேலியாவிலும் விமரிசையாகக் கொண்டாடப்படவிருக்கின்றன.

ஆக்டோபர் மாதம் 11ம்,12ம் திகதிகளில் இவ்விழா கொழும்பு திருச்சபையில் நடைபெற விருக்கின்றது- கொழும்பில் நடைபெறும் விழாவிற்கு தென்னிந்திய பேராயர்கள் பலரும் மிஷன் உடன் பங்காளிகள் சிலரும் வருவார்கள் என்று எதிர்பார்க்கின்றோம்.

அமெரிக்கன் மிஷனரிமார் யாழ்ப்பாணம் வந்த தினமான அக்டோபர் மாதம் 15ம் திகதி இவ்விழா வட்டுக் கோட்டையில் நடைபெறவிருக்கின்றது.

தென்னிந்திய திருச்சபையின் உதயம் திருச்சபை வரலாற்றிலே மிக முக்கியமான நிகழ்வு. பெந்தேகோஸ்து நாள், சீர் திருத்தநாள் என்பனவற்றோடு ஒப்பிடத்தக்கது. இந்தத் திருச்சபையில் இப்பொழுது 21 ஆதீனங்கள் இருக்கின்றன. இருபது லட்சம் மக்கள் இதில் அங்கத்தவர்களாக இருக்கின்றனர். தென்னிந்திய திருச்சபை திராவிட மக்களின் ஒன்றியம். தமிழரும் மலையாளிகளும் கன்னடக்காரரும் தெலுங்கரும் கிறிஸ்துவின் நாமத்தில் ஒருங்கு கூடுவது இங்கு தான்.

1947ல் யாழ்ப்பாணத்தில் இருந்த SIUC திருச்சபையார் இவ்வொன்றியத்தில் மிகுந்த ஆர்வத்தோடு சேர்ந்து கொண்டனர்.

ஆரம்ப கால ஆதீனங்களில் ஒன்று என்னும் பெருமையை உடையது எமது ஆதீனம். பேராயர்கள் சபாபதி குலேந்திரனும் பேராயர் அம்பலவாணரும் தென்னிந்திய திருச்சபையில் மிகுந்தமதிப்புப் பெற்ற தலைவர்களாக விளங்கியிருக்கின்றனர். நமது பிரதிநிதிகள் கல்வியிற் சிறந்தவர்கள், ஆற்றல் மிக்கவர்கள் என்று தென்னிந்திய கிறிஸ்தவர்கள் கொண்டாடினர்

தென்னிந்திய திருச்சபை யாழ்ப்பாண அத்தியட்சாதீனத்தின் முதலாவது பேராயர் சபாபதி குலேந்திரன் 27- 9- 1947ல் சென்னையில் பிரதிஷ்டை செய்யப்பட்டார். 1947ம் ஆண்டு அக்டோபர் மாதம் பத்தாம் திகதி அவர் புகையிரத மார்க்கமாக யாழ்ப்பாணம் திரும்பினார். யாழ் புகையிரத நிலையத்தில் அவர் வரவேற்கப்பட்ட பொழுது எடுக்கப்பட்ட படம் பேராயர் தம்பதியினருக்கு இருமருங்கிலும் டாக்டர் பியூவெல் தம்பதியினர் காணப்படுகின்றனர்.

இன்று பல விஷயங்கள் நடந்து முடிந்து விட்டன. இந்தியாவும், இலங்கையும் தனித்தனி நாடுகளாகி வெவ்வேறு போக்கிற் சென்று கொண்டிருக்கின்றன. இந்தியப் பயணம் பெரும் செலவாக மாறி விட்டது. நமது திருமண்டலத்தின் அங்கத்தவர்கள் பலர் வெளிநாடு சென்றுவிட்டனர் ஆங்கில மொழியறிவு எமது ஆதீனத்தில் குன்றியிருகின்றது.

இம்மாற்றங்கள் மத்தியில் தென்னிந்திய திருச்சபை தனது பொன்விழாவைக் கொண்டாடுகின்றது. கடந்த கால நினைவுகள் நமக்குக் கண்ணீரைக் கொண்டு வரலாம். பலாலி விமான நிலையமும், தலைமன்னார் துறைமுகமும் இருந்த பொழுது மாதந்தோறும் அன்பர்கள் இந்தியாவிலிருந்து வந்தனர். நம்முடன் பட்சமாகப் பேசினர். நம்முடன் தங்கியிருந்தனர். ஓய்வு நாட் பாடசாலைப் பாடங்களை கூட இந்தியா நமக்களித்தது. தலைமைப் பேராயர்கள் பலரும் நமது கூட்டங்களை அலங்கரித்தனர். தலைமைப் பேராயர் மைக்கல் ஹோலிஸ் முதல் தலைமைப் பேராயர் விக்டர் பிரேம் சாகர் வரை எத்தனைப் பேர்! நினைக்கவே நெஞ்சம் குமுறுகின்றது!.

நமது பொன்விழா இத் தொடர்புகளை மீண்டும் வலுப்படுத்துவதாக அமையட்டும்- கொழும்புத் திருச்சபையார் இப் பணியில் காட்டும் கரிசனை நமக்கு உற்சாகமளிப்பதாகவிருக்கின்றது.

உள்ளூர்த் திருச்சபைகளிடத்தும் குருமார்கள் இந்தக் குதூகல உணர்ச்சியை மக்களுக்குள் பரப்புவார்களாக.

# நூற்றாண்டில் தந்தை செல்வா

தந்தை சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகம் மலேயா கூடாநாட்டின் ஈப்போ நகரில் 1898 ஆம் ஆண்டு பங்குனித் திங்கள் 31ம்திகதிபிறந்தார் ஆகவே இன்று அவர் உயிரோடு இருந்திருப்பாரேல் அவருக்கு இவ்வாண்டு அகவை 99 ஆகும் எனவே 1998ல் அன்னாரது ஜனன நூற்றாண்டை எதிர்கொள்ளவுள்ள நாம் அவர் குறித்த சில நிகழ்வுகளை 'உதய தாரகை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ள அவாவுகின்றேன்.

முதலாவது பாராளுமன்றத்தின் முதல் சிம்மாசன உரைக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணைக்கான ஒரு திருத்தத்தை 1947 நவம்பர் 26ம் திகதி பிரேரரித்த போது அவ்வாறு செய்வதற்கு அவர்கள் விரும்புவார்களாகில் நாட்டின் ஏனைய பகுதிகளில் இருந்து பிரிந்து செல்லும் உரிமை ஏன் தமிழ் மக்களுக்கு இருக்கக் கூடாது? என தந்தை செல்வா பாராளுமன்றத்தில் தானே வினாவியிருந்தார். (அதற்குரிய பாராளுமன்ற நடவடிக்கைகள் பதிவேடு காண்க.)

## தந்தை செல்வாவின் அட்ட அவதானம்

1949 இல் இலங்கைத் தமிழரசுக் கட்சியைத் தோற்றுவித்ததும் தனிப்பட்டவர்களை வீடுவீடாகச் சென்று சந்தித்து தமது புதிய இயக்கத்துக்கு ஆதரவு தேடினர் தமிழரசுப் பிரமுகர்கள்.

அப்படியான ஒரு சந்திப்புக்கு சாவகச்சேரியில் இருந்த ஒரு பண்டிதர் வீட்டுக்கு அப்போது புனித யோவான் கல்லூரியிலும், சம்பத்தரிசியர் கல்லூரியிலும் ஆசிரியர்களாகவிருந்த சாவகச்சேரித் தொகுதியைச் சேர்ந்தவர்களாகிய திரு பரராஜசிங்கமும், திரு. அருணாச்சலமும் உடன்வர சென்றிருந்தார்கள் தந்தை - செல்வாவும் அமரர் வன்னியசிங்கமும்-

தமிழ் காங்கிரஸ் கட்சித் தலைவரின் ஒளிப்படத்தை சாமிப் படங்களுக்கு அருகருகாக வைத்து தினமும் தீபம் காட்டி வணங்கி வரும் அவர் வீடு செல்லுவது பயன்தராது என்று உள்ளூர் பிரமுகர்கள் இருவரும் தடுத்த போதும் அப்படிப்பட்டவர்களைஒரு போதுமே ஒதுக்கிவிடக் கூடாது என தந்தை செல்வா அறிவுறுத்தியிருந்தார்.

பண்டிதர் வீட்டுப் படியேறி இவர்கள் சென்ற போது தமிழ் மரபுப்படி வரவேற்று உபசரித்த பண்டிதருடன் உரையாடல் ஆரம்பமாயிற்று! பண்டிதரோ தமது தலைவரும் அதைத்தான் சொல்லுகிறார். நீங்களும் அதையே கூறுகிறீர்கள். ''அவரோ பெரிதாக கொழுக்கட்டை கொழுக்கட்டை என்கிறார். நீங்கள் மோதகம் மோதகம் என்கிறீர்கள்' என அவற்றின் உள்ளீட்டை சிலேடையாக்கி திரும்பத் திரும்ப சொல்லிக்கொண்டிருந்த பண்டிதரை விழித்து தந்தை செல்வா கூறினார்; ''ஆம் பண்டிதர். அதனாலே தான் யாரும் கொழுக்கட்டை சாமிக்குப் படைப்பதில்லை, மோதகத்தைத்தான் படைப்பார்கள்'' என்று! பண்டிதரின் முகத்திலே அசடு வழிந்தது.

பண்டிதர் வீட்டால் வெளியே வந்ததும் அமரர் வன்னியர் தந்தை செல்வாவிடம் விசாரித்தார். ஒரு சைவனாகிய நான் தெரிந்துகொண்டிராத இந்த உண்மை எப்படி உங்களுக்கு தெரிய வந்ததென்று சிறு புன்னகை முகத்தில். தந்தை செல்வா அளித்த பதில், அதற்கு அட்ட அவதானமே'' காரணம் என்று. பண்டிதர் வீட்டுக்கு தமிழரசுத் தலைவருடன் உடன்சென்றிருந்த ஒருவராகிய மட்டுவிலைச் சேர்ந்த அருணாசலமே 1952 பொதுத் தேர்தலின் போது சாவகச்சேரியில் தமிழரசு வேட்பாளராக நிறுத்தப்பட்டார்.

சா. ஆ. தருமரத்தினம்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் ...நூலகம்.



உன்னால் செய்ய முடிந்த நல்லதையெல்லாம் செய்க!
செய்ய முடிந்த முறைகளிலெல்லாம் செய்க!
செய்ய முடிந்த இடங்களிலெல்லாம் செய்க!
செய்ய முடிந்த நேரங்களிலெல்லாம் செய்க!
செய்ய முடிந்த மக்களுக்கெல்லாம் செய்க!
செய்ய முடிந்த காலமுழுவதும் தொடர்ந்து செய்க.
---ஜான் வெஸ்லி

# உதயதாரகை

## திருப்பணியர் வழியனுப்பு வழிபாடு

யாழ்ப்பாணக் கிறிஸ்தவ இறையியற் கல்லூரியினர் தமது வருடாந்த வழியனுப்பு விழாவினை ஏப்ரல் மாதம் 27ம் திகதி வட்டுக்கோட்டை ஆசனக்கோவிலில் நடத்தினர்.

கடந்த நான்கு ஆண்டுகளாக இந்த இறையியற் கல்லூரியிலே பயிற்சி பெற்ற எஸ். குகனேஸ்வரன், எஸ்.பி தேவதாஸ், எம். ஜே. சுதர்ஸன், செல்வி ஆ. டெய்சி ஆகியோர் திருச்சபைப் பொறுப்பினை ஏற்கவிருக்கின்றனர்.

பல விதமான அனுபவங்களுக்கூடாகச் செல்லும் இன்றைய திருச்சபைக்கு இந்தச் சகோதரர்களின் வெற்றி உற்சாகமளிக்கும் என்பதில் ஐயமில்லை.

திருச்சபை நம் தெரிவினாலும் தீர்மானத்தினாலும் ஏற்படுவதில்லை, அது கடவுள் தீர்மானத்தினாலே ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இச்சபையோடுதான் கடவுள் தமது உடன்படிக்கையைச் செய்துள்ளார். இன்று இறையியற் பள்ளியில் படிப்பை முடித்து அரங்கேறும் சகோதரர்கள் இதனை மனதில் இருத்தவேண்டும்.

எந்த விதமான சோர்வுகள் ஏற்பட்டாலும் திருச்சபையே தமது அழைப்பு என்பதனை உணர்ந்து கொள்ள வேண்டும். உலக பிரகாரமான வேலைகள், உலகில் முன்னேற்றம், கல்வி என்பனவையெல்லாம் திருச்சபைக்குப் பின்னாலேதான் வரவேண்டும்.

நமது இறையியற் கல்லூரி ஆரம்பமாகிய பின் முப்பத்தாறு வாலிபர்களும் பெண்களும் அரங்கேறி விட்டனர். ஒருவர் திரைக்கு அப்பாற் சென்று விட்டார். ஒருவர் ஓய்வு பெற்றுவிட்டார்.

நமது இறையியற் கல்லூரியை நினைக்கும் பொழுதெல்லாம் இறைவனை நன்றியுடன் ஸ்தோத்தரிக்கவேண்டியவர்களாக இருக்கின்றோம். இன்று நமது திருச்சபைகளில் பாடுபடும் ஊழியர்களிற் பெரும்பாலானவர்கள் நமது இறையியற் கல்லூரியின் பழைய மாணவர்களேயாகும். இந்தியாவிற் கற்று அரங்கேறியவர்களிற்பலர் வெளிநாட்டு மோகங்கொண்டு வெளியேற முயற்சிக்கின்றனர். சிலர் வெளியேறிவிட்டனர். நமது இறையியற் கல்லூரியிற் கற்று அரங்கேறியவர்கள் தாழ்மையோடும், பணிவோடும், தமது கடமையை அன்புடன் செய்கின்றனர். இவர்களது பக்தி, ஜெபம், சபைவிசாரிப்பு பற்றிப் பலரும் சிலாக்கித்துப் பேசியுள்ளனர் இப்பொழுது அரங்கேறும் குகனேஸ்வரனும், தேவதாசும், சுதர்சனும், டெய்சியும் இந்த நல்ல மரபை தொடர்ந்து வளர்ப்பார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

இன்று திருச்சபை மக்கள் யாவரும். அன்புக்காகவும் தேவதயவுக்காகவும், ஆலோசனைப் பணிக்காகவும் ஏங்கி நிற்கின்றனர். பணம், புகழ், அந்தஸ்து, என்பனவற்றைத் தேடி வாலிபர்கள் நாயாக அலைகின்றனர். இந்தக் கழுத்தறுப்புப் போட்டி நிறைந்த உலகில் புதிய ஊழியர்கள் ''ஞானத்திலும், வளர்த்தியிலும், தேவ கிருபையிலும்; மனுஷர் தயவிலும் அதிகம் அதிகமாய் விருத்தியடைவார்கள ாக.''

# திருமறையில் சில பெண்கள்

திருமறையில் பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் பல பெண்களைப்பற்றியும், அவர்களுடைய வாழ்க்கைச் சரித்திரம் பற்றியும் குறிப்பிடப் பட்டிருக்கிறது. இப்பெண்களின் வாழ்க்கையில் காணப்பட்ட நற்குணங்களை நாமும் நம் வாழ்விலே பயன்படுத்திக் கொள்ள முயற்சி செய்வோம்

### மிரியாம் (யா 15: 20, 21)

கடவுளுக்கு நன்றி செலுத்துவதில் முதன்மையாக இருந்தவர் தான் ஆரோனின் சகோதரியான மிரியாம். பார்வோனின் அடக்கு முறையிலிருந்து தானும் இஸ்ரவேல் மக்களும், மீண்டு கொண்ட நிகழ்வு. கர்த்தருடைய கிருபைதான் என்பதை உணர்ந்து கர்த்தரை ஸ்தோரித்து ஆடிப் பாடுகிறார்.

எனவே கடவுள் செய்த உதவிக்காக நன்றி செலுத்தும் பண்பினை உடையவர்களாக நாம் காணப்பட வேண்டும் நம் வாழ்வில் உண்டாகும் நன்மைகள் யாவும் கர்த்தரால் கிடைத்தது என்று உணர்ந்து நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

### அன்னாள்

(1 சாமு 1:10,11)

எம்முடைய தேவைகளை ஜெபத்தின் மூலம் ஊக்கத்தோடு தெரிவிக்க வேண்டும், என்பதனை செயலிலே அன்னாள் காண்பித்தாள்.

தனக்குக் குழந்தை இல்லாத போது தன்னுடைய இதயப்பாரத்தினை கர்த்தருடைய சமூகத்தில் பொருத்தனை செய்து கண்ணீரோடு ஜெபம் செய்தாள்.

இவவாறு கண்ணீரோடு கடவுளிடம்ஜெபித்ததால் காலப்போக்கில் மகனை கடவுள் கொடுத்தருளியதும், தான் கடவுளின்சமூகத்தில் பொருத்தனை செய்தபடியே பிரகாரம், தன் மகன சாமுவேலை ஆலயப் பணிக்கென்று ஒப்படைக்கிறாள்.

அன்னாள் கர்த்தருக்கென்று சாமுவேலை அர்ப்பணம் செய்தற்குப் பதிலாக கர்த்தர் அவளுக்கு மூன்று குமாரரையும், இரண்டு குமாரத்திகளையும் பிள்ளைச் செல்வங்களாகக் கொடுத்தார்.
(*1 சாமு 2: 21*)

## பெண்கள் பகுதி

**செல்வி. டெய்சி ஆசீர்வாதம்**

எனவே நாமும் நமது பிரச்சனைகளைப் பொருத்தனையோடு கர்த்தருக்குத் தெரியப்படுத்தி நிறைவேற்றினால் நாம்செலுத்தினதற்கும் அதிகமாகக் கர்த்தர் நமக்குத் தருவதற்கு சித்தமாய் உள்ளார்.

### சூனேமியாள்

(II இராஜா 4:8- 10)

இவள் கனம் பெருந்திய பெண்ணாக இருந்தும் கடவுளுடைய ஊழியக்காரனான எலிசாவை கனம் பண்ணுகிறாள். எலிசா வரும் போதெல்லாம் சகல வசதிகளையும் அமைத்து தங்குவதற்கு அறையொன்றைக் கொடுத்து உதவி செய்கிறாள்.

இதேபோல், கடவுளின் ஊழியக்காரரை நாம் கனம் பண்ணி, அவர்களுடைய நற்போதனைகளைச் செவி மடுக்கிறவர்களாக இருக்க வேண்டும்.

### மரியாள்

(லூக் 10: 38 - 42)

கடவுளுடைய வார்த்தையைக் கேட்பதில் நாம் மரியாளைப் போல் ஆர்வம் உள்ளவர்களாக இருக்க வேண்டும். இயேசுவின் பாதத்திலே பணிவோடு அமர்ந்து அவருடைய போதனைகளைச் செவிமடுத்தாள். எனவே மரியாள் இயேசுவின் சீஷியாக மாறும் தன்மை காணப்படுவதுடன், ''தேவையானது ஒன்றே மரியாள் நல்ல பங்கைத் தெரிந்து கொண்டாள்'' என்று இயேசுவால் புகழப்படுகிறாள்.

ஆகவே, நாம் உலக காரியங்களுக்கு முதலிடம் அளிக்காது, கடவுளின் வார்த்தையைக் கேட்பதற்கே முதலிடம் அளிக்க வேண்டியவர்களாக இருக்க வேண்டும்.

### மார்த்தாள்

(லூக் 10! 38- 42)

மார்த்தாள் உலக காரியங்களிலே அதாவது அழிந்து போகிற போஜனத்தை ஆயத்தப்படுத்த நேரத்தை செலவு செய்பவளாக காட்சியளிக்கின்றாள்.

எனவே அழிந்து போகிற உணவுக்காக நாம் அதிக நேரம் செலுத்தாமல், அழியாத, நிலையான வாழ்விற்கு ஏற்ற கடவுளின் வார்த்தையைக் கேட்க ஆயத்தமாக இருக்கவேண்டும்.

### சப்பீராள் (அப்5: 2, 8)

கடவுளுக்குச் செலுத்தும் காணிக்கையை கணவனுடன் சேர்ந்து ஒளித்து வைத்து ஆவியானவருக்கு விரோதமாகப் பொய் சொல்லி விடுகிறாள்.

ஆகவே, கடவுளை வஞ்சியாமல் கொஞ்ச வருமானமாக இருந்தாலும், அதில் பத்தில் ஒரு பங்கையாவது செலுத்த தவறக்கூடாது.

கடவுளுக்கு கொடுத்தால் இன்னும் ஆசீர்வாதமாக எங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்.

### சமாரிய ஸ்திரீ

யோவான் (4: 28, 29)

சமாரிய ஸ்திரீ 'தாகத்துக்குதா' என்று கேட்ட இயேசுவை இன்னார் என்று அறிந்ததும், தான் பெற்ற ஆன்ம சந்தோஷத்தையும் சமாதானத்தையும் தனக்குள்ளே வைத்திராமல் தன்னுடைய சமுதாய மக்களுக்கு ஓடிச் சென்று இயேசு என்பவரை அறிமுகம் செய்து வைக்க மக்களை அழைத்துக் கொண்டு வருகிறாள்

எனவே நாமும் சமாரிய ஸ்திரியைப் போன்று நம்முடைய சமுதாய மக்கள் மத்தியில் கடவுள் நமக்குப் அளித்த நல் வாழ்வினை, அமைதியை எடுத்துக் கூறி அவர்களையும் இயேசுவண்டை அழைப்பித்து வரும் இதயங்களாக இருக்க இறைவனை கேட்க வேண்டும்.

இயேசுவுக்கு சாட்சியாக இறுதி வரை வாழ்ந்து இன்பமுடன்

(4ம் பக்கம் பார்க்க)

# சிறார் சோலை



கிறிஸ்துகுறள்:- அறிவு நிரம்பியவன் அடக்கமாக நடந்து கொள்வான்''

பி. எஸ் ஆர். ராவ்

## அன்பான தம்பி தங்கைகளே!

வேதநாயக சாஸ்திரியார் என்றொரு கிறிஸ்தவக் கவிஞர் தஞ்சாவூரில் வாழ்ந்தார். அவரது காலம் 1772 – 1864ம் ஆண்டு வரையாகும். அவர் அடிக்கடி உணவுக்குறைபாட்டால் அவதிப்பட்டு வந்தார். ஆனால் இறைவன் அவரைக் கைவிட வில்லை. ஒருமுறை அவரது மனைவி மிகவும் பிரயாசப்பட்டு எங்கிருந்தோ குறைந்தளவு நெல்லைக் கடனாகப் பெற்று வந்தார் அந்த நெல்லை எடுத்து ஏழை களுக்குத் தானம் செய்து விட்டார் சாஸ்திரியார்.

இன்னொரு முறை அரசர், சில ஏக்கர் நிலத்தை சாஸ்திரியாருக்குத் தர முயன்றபோது அதை மறுத்து விட்டார்- ''அரசே கிறிஸ்தவ வேதத்தில் அன்றன்றுள்ள ஆகாரத்தைத் தாரும் என்று நல்ல ஒரு பிரார்த்தனை உண்டு நெல்மூட்டைகள் பல என் மனம் இடம் கொடுக்குமா? நாள் தோறும் இறைவன் பாதத்தில் இருக்கிற நாம் இப்பிரார்த்தனையால் ஆறுதலடைந்து வருகிறோம். எங்களைத் தாயின் கர்ப்பத்தில் இருக்கும்போதே தன் பிள்ளைகளாக அழைத்தவர், இது வரையில் பட்டினியாய் இருக்காதபடி பார்த்துக் கொள்கிறார். அவர் நடத்துதலில் எமக்குப் பூரண விசுவாசம் உணடு. நான் திடீரெனப் பணக்காரானக மாறினால், நானும் என் சந்ததியும் இறைவனை மறந்து நாஸ்திகர்களாக மாறக்கூடும். நான் மரிக்கும் போது, என் பிள்ளைகளுக்கு ஆஸ்தி, நில்ங்களுடன் நாஸ்தீகத் தன்மையையும் வைத்துவிட்டுப் போக எனக்கு விருப்பமில்லை. பூரண பக்தியையும், வறுமையினால் உண்டாகும் விசுவாசத்தையுமே ஆஸ்தியாக என் பிள்ளைகளுக்கு வைக்க விரும்புகிறேன். எனவே நீங்கள் தருகின்ற ஏக்கர் நிலங்கள் எனக்கு வேண்டாம்'' என்றார்.

பார்த்ீர்களா? நாமும் விசுவாச உறுதியும், சோதனைகளை மேற்கொள்ளும் தைரியமும் கொண்டவர்களாக மாறுவோமா? தனது ஆழ்ந்த விசுவாசம் மூலம் சிறந்த கிறிஸ்தவக் கவிஞராகத் திகழ்ந்த சாஸ்திரியார் போன்று – நாமும் இறை புகழை ஏற்றுவோமா?

சிந்திப்போம்!– செயற்படுவோம்!!

## சிறார் சிரிப்பு

ஆசிரியர்:- அரையை காலால் பெருக்கினால் என்ன வரும்?

மாணவன்:– கால் தேய்ந்து இரத்தம் வரும் சேர்.

## சென்றவாரப் புதிரின் விடை

நகோமி

## இவ்வாரப் புதிர்

யோவான் 17: 21 (முற்பகுதி) எதன் மகுட வாக்கியம்?

□ □ □ ★ □ □ □ □

தெரிந்தவர்கள் விடையை எழுதி அனுப்புங்கள்
தெரியாதவர்கள் அடுத்த இதழை புரட்டுங்கள்.

சரி தம்பிதங்கைகளே – அடுத்த இதழில் சந்தித்து சிந்திப்போமா?
அதுவரை என்றென்றும் அன்புடன்

**தாரகை அண்ணா**

தெருவள்ளுவ நாயனார் அருளிச் செய்த

தெருக்குறள்

அதிகாரம் மூன்று

## விமானப் பயணம்

★ காலையெழுந்து பகலெல்லாம் உணவின்றி
மாலைவரை கியூவில் நில்

★ (f) போம் கொடுத்தாற்போதுமென்று ஏதுமே செய்யாமல்
சோம்பியிருப்பர் அறிவிலிகள்

★ இன்றுவரும் நாளைவரும் என்றுவரும் எனதுபெயர்
என்றேங்கியிருப்பதே தொழில்

★ நேற்று இங்கிருந்தான் இன்று கொழும்படைந்தான்
என்னும் பெருமையுடைத்திவ் வுலகு

★ மூவாயிரம் கொடுத்து விமானத்திலிருந்தபடி ரயில்
பயணத்தை எண்ணி வயிறெரிதல் மரபு

★ பத்திரிகைக்கும் குடிநீர்க்கும் அயலவனைக் கெஞ்சுபவன்
நீண்ட பயணத்தின் முன்

★ தனக்கேலாச் சுமைதன்னை சுமந்து வருபவள்
கழுதைப் பிறப்புக்கு வித்து

★ கிலோ இருபது பெட்டியில் அடக்கம், கைப்பையில்
ஐந்தடக்கம் என்பதே பயணநெறி

★ கொழும்பு சென்றடைந்து பசியாறி உறங்குமுன்பு
பொலிசுக்கு சொல்பவரே பெரியர்.

★ பிரயாணம் முடிந்தவுடன் அடுத்த பயணத்திற்கு
பிரையாசப்படுவதே அறிவு

## மருத்துவ...

களையுமறியாது உடலில் நோயின் தாககம் செயற்படத் தொடங்கி முடிவில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தி விடுகின்றது. ஆகவே நாம் விழிப்புடன் இருக்கஇது ஒரு அரிய சந்தர்ப்பம் எனவும் எடுத்துரைத்தார்.

இக்கூட்டதில் சபைக்குருவானவர் உரையாற்றும் போது இன்று யாழ் குடா நாட்டில் நெருக்கடியான சூழ் நிலையிலும் லயன்ஸ் கழகம் அளப்பெரிய சேவையை ஆற்றி வருகின்றது. நோய் வருமுன் தடைகாப்பு பணியை மிகத் துரிதமாக செயலாற்றி வருகின்றது. வறுமைக்கோட்டிலுள்ள அநேருக்கு கண் பரிசோதனையளித்து இலவசமாக மூக்குக் கண்ணாடியும் வழங்கி வருகிறது. இச்சேவை மென்மேலும் வளர ஒவ்வொருவரும் தங்களால் இயன்றளவு ஒத்துழைப்பை கழகத்துக்கு வழங்க வேண்டுமெனவும் கூறினார்

நடாத்தப்பட் வைத்திய பரிசோதனையில் 63 பேர் இரதத் அழுத்த பரிசோதனைக்கும், 56 பேர் சிறுநீரக பரிசோதனைக்கும் உட்படுத்தப்பட்டார்கள். புதிதாகப் வைத்திய பரிசோதனை செய்ய பட்ட ஒருவருக்கு சலரோகநோயின் தாக்கம் அதிகளவு இருக்கக் கண்டு பிடிக்கப்பட்டு சாவகச்சேரி ஆதர வைத்தியசாலைக்கு உடனடியாக அனுப்பப்பட்டார். நோயின் தாக்கம் சிறிதளவாக உள்ளவர்களுக்கு டாக்டர்களினால் அறிவுரைகள் வழங்கப்பட்டது.

## திருமறையில்...

திகழ பரிசுத்த ஆவியின் பெலன் வேண்டி நிற்போம்.

''குணசாலியான ஸ்திரியைக் கண்டு பிடிப்பவன் யார்? அவளுடைய விலை, முத்துக்களை பார்க்கிலும் உயர்ந்தது''.

## நிலாக்கூட்டம்

தேவகிராமம் திருச்சபையில் 22- 04 - 97 செவ்வாய் கிழமை நிலாக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சபைப் பிள்ளைகளின் பாடல்களும் வண. D. C. இரட்ணசிங்கம் போதகர், சகோதரன் ஈனோக் போதகர் அவர்களுடன் வாலிபக் குழுவினரும் பங்கு கொண்டு வில்லுப்பாட்டினையும் இறை செய்தியையும் அளித்து மிகவும் சிறப்பித்தார்கள் நாட்டின் சூழ்நிலையிலும் நிலாக் கூட்டம் நடாத்தியது குறிப்பிடத் தக்க விடயமாகும்.

## விளையாட்டுப் போட்டி

கிழக்குப் பிராந்தியத்தில் இல்லப் பிள்ளைகளின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகள் முதல் தடவையாக இரண்டு நாள் நிகழ்ச்சியாக மட்டக்களப்பு இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டிகளில் பிரதம விருந்தினராக திரு. திருமதி. A. N. S. ஜீவஜோதி S.L C.C.C.A இயக்குனநர் கலந்து கொணடனர். இந்நிகழ்ச்சிகளில் இல்லப் பிள்ளைகளின் அணிநடை, உடற்பயிற்சி, வினோத உடைப்போட்டி, என்பனவும் ஒட்ட நிகழ்ச்சிகளும் ஆண் பெண் பிள்ளைகளுக்கான வேறு நிகழ்ச்சிகளும நடைபெற்றன.

WILLIAM MATHER
MEMORIAL WOMEN'S
CENTER
**56thANNIVERSARY**
**Venue:** Willam Mather Memorial Women's Centre
**Date:** 10 - 05 - 1997
**Time;** 8 30 (S.L.T)
Public meeting 11. a.m
You are coıdially invited
President
**Women Centre Board**

இப்பத்திரிகை வட்டுக்கோட்டை ஆதீனக் காரியாலயத்தில் உள்ள அமெரிக்கன் இலங்கை மிஷன் அச்சகத்தில் உதயதாரகை முகாமையாளர் ஜி. நடராஜாவினால் 1997 ஆம் ஆண்டு மே 0: ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.